Sl. No.

ஒரு ரூபாய் நீதி மன்றக்
கட்டண ஒட்டுதலை
ஒட்டப்பட வேண்டும்

## விண்ணப்பதாரராலும் இணைக்கப்பட்டுள்ள கட்டட உருவரைப்படிவம் மற்றும் கட்டட விண்ணப்பங்களில் ஒப்பமிட்டுள்ள உரிமம் பெற்ற அளவாயராலும் நிரப்பப்பெற வேண்டி வினாத்தொகுதி

| விவரங்கள் | 'ஆம்' அல்லது 'இல்லை' எனக்கூறுக |
|---|---|
| 1. உரிமையாளராலும், உரிமம் பெற்றுள்ள அளவாயராலும் முறையே ஒப்பமிடப்பெற்ற கட்டட உருவரைப்படிவத் தாள்களின் ஏழு படிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? | ........................ |
| 2. இணைக்கப்பட்டுள்ள திட்டப்படிவங்கள், நில வரைபடம், கட்டட உருவரைபடம், உயரம், வெட்டுவாய் உயரம் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றனவா ? | ........................ |
| 3. ஏழாம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி வண்ணக்குறிப்பீடுகள் பின்பற்றப்பட்டுள்ளனவா ? | ........................ |
| 4. கட்டடவிதிகள், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் இவற்றிற்கு ஏற்ப கட்டட உருவரைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா ? | ........................ |
| 5. (அ) பட்டாவாவது, மனைமாற்றம் செய்ததற்கான ஆதார மூலச்சான்றாவது தரப்பட்டுள்ளதா ? | ........................ |
| (ஆ) 'அ'வில் குறித்த தகவல் கிடைத்திலதாயின் 15 ஆண்டுகள் முன்னையதான வரிக்கேட்பு அறிவிப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதா ? | ........................ |
| 6. கருதப்பட்டுள்ள கட்டடம் கட்டுதற்கான நோக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா ? | ........................ |
| 7. (அ) ஒப்புதல் பெற்ற அமைப்புத் திட்டத்தின்படி அல்லது உட்பிரிவுத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளதா ? | ........................ |
| (ஆ) இதற்குமுன் ஒப்புதல்பெற்ற கட்டட விண்ணப்பம் ஏதேனும் இருந்தால், அதுவோ அல்லது அக்கட்டட விண்ணப்ப எண்ணோ தரப்பட்டுள்ளதா ? | ........................ |
| 8. சம்பந்தப்பட்ட நிலம் முஸ்லீம் அறக்கட்டளை (வக்பு) அல்லது இந்துமத நிறுவனத்திற்கு சொந்தமானதா ? அவ்வாறாயின் அவற்றுக்குரிய அதிகாரிகளிடமிருந்து கருதிய கட்டடம் கட்டுவதற்கு உரிய முன் அனுமதி பெறப்பட்டுள்ளதா ? | ........................ |
| 9. குத்தகை நிலமாயின் அதன் உரிமையாளரிடமிருந்து ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப்பட்டுள்ளதா ? | ........................ |
| 10. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வீட்டுமனை ஒதுக்கப்பட்டிருக்குமேயானால் அவ்வாரியத்தினரின் ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப்பட்டுள்ளதா ? | ........................ |

11. தொழிற்சாலையாயின் / தொழிற்சாலைகளின் மேற்பார்வையாளரின் ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப் பட்டுள்ளதா ? அல்லது அதற்கான விண்ணப்பம் செய்யப் பட்டுள்ளதா ? பின்னதாயின் அதன் நகல் ஒன்று இணைத்தல் வேண்டும். ..........................................

12. எளிதில் தீப்பற்றும் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கான கட்டடமாயின் வெடிபொருள் ஆய்வாளரின் 'மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப்பட்டுள்ளதா ? அல்லது அதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதா ? பின்னதாயின் அதன் நகல் இணைக்கப்படல் வேண்டும். ..........................................

13. கருதப்பட்ட கட்டடத்தின் அண்மையில் உயர் அழுத்த மின் கம்பிகள் செல்லுமாயின் ''மின்சார வாரியத்தினரின்'' ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப்பட்டுள்ளதா ? ..........................................

14. கட்டடம் பொதுமக்கள் சார்பிடச் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டதாயின் அதாவது சமூக உறவு மைய நிலையம், வழிபாட்டிடம், வாடகை விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் முதலியன – காவல் துறை ஆணையாளரின் ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' இணைக்கப்பட்டுள்ளதா ? அல்லது அதற்கென விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா ? பின்னதாயின் அதன் நகல் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். ..........................................

15. வீட்டுமனை முன் உள்ள தெருவின் அகலம் ( சொத்து வரம்புகளுக்கிடையில் அளக்கப்பட்டது ) ..........................................

16. மூலையில் உள்ள மனையாயின் விதிகளின் தேவைக்கேற்க மூலையில் புடைச்சரிவு செய்யப்பட்டுள்ளதா ? ..........................................

17. கட்டட அமைப்பிற்குரிய திட்ட உருவரைப் படங்கள், மதிப்பீடுகள் முதலியன உரிமம் பெற்ற அளவாயரால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளனவா ? ..........................................

18. (அ) ஏற்கெனவே இருக்கும் கட்டடப்பரப்பு ..........................சதுரம்.......................

(ஆ) கட்டக் கருதும் கட்டடப்பரப்பு ..........................ச. மீ...........................

(இ) செலுத்த வேண்டிய உரிமக் கட்டணம் ..........................................

உரிமையாளரின் ஒப்பம் — உரிமம் பெற்ற அளவாயரின் ஒப்பம்

## உறுதிமொழி

கொசு உற்பத்தியை தவிர்க்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி, கிணறு, பாதாளக் குடிநீர் தொட்டி, மற்றும் மேல்நிலைத் தொட்டி ஆகியவைகளை மூடி சீல் வைக்கவும் மேலும் தனி வீடுகளில் மழைநீரை வீணாக்காமல் பூமிக்கடியில் சேகரிக்கும் முறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி கண்டிப்பாக சேகரிப்போம் என்று நாங்கள் உறுதிமொழி அளிக்கின்றோம்.

உரிமையாளர். — உரிமம் பெற்ற நில அளவையாளர்.

# பிற்சேர்க்கை – அ

( பார்க்க விதி (3) (1) (அ) சென்னை மாநகராட்சிக் கட்டட விதிகள், 1972 )

சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 234–ஆம் பிரிவுப்படி அல்லது தமிழ்நாடு நகரத் திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆம் பிரிவுப்படியான விண்ணப்பம்.

அனுப்புநர்

உரிமையாளர் (அல்) விண்ணப்பதாரர் பெயர்

முகவரி

பெறுநர்
ஆணையாளர்,
சென்னை மாநகராட்சி, சென்னை.

ஐயா,

நான் அடியிற்கண்ட கோட்ட எண்.......................... இல் உள்ள .............................................................. தெரு (அல்) சாலையில், மாநகராட்சி மதிப்பீட்டு எண்.............................................. நகர/மறு நில அளவீட்டு எண் ........................................ இவற்றைக் கொண்ட மனையில் குடிசையில்லாத ஒரு கட்டடம் கட்ட / மீண்டும் கட்ட / அக்கட்டடத்தில் மாற்றங்கள் செய்ய / விரிவாக்க எண்ணிச் சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 234 ஆவது பிரிவின் கட்டுப்பாட்டு விதிகளோடு, சென்னை மாநகராட்சிக் கட்டட விதிகள் 1972–இன் படியும் தமிழ்நாடு நகரத் திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆவது பிரிவின்படியும் கீழ்க்கண்ட முப்படித் தொகுதிகளை அனுப்புகிறேன்.

(அ) கட்டுவதற்கு / மீண்டும் கட்டுவதற்கு / மாற்றம் செய்வதற்கு / விரிவாக்குவதற்கு உரிய கட்டடம் உள்ள மனையின் நிலவரைவுப்படம்

(ஆ) கட்டடத்தின் நிலத்தளவு மாதிரி, ஒவ்வொரு தளத்தின் மாதிரி, உயரம் மேலும் பகுதிகள் இவற்றைக் காட்டும் கட்டட உருவரைப்படம் / படங்கள்

(இ) வேலைமானத் திட்ட விவரத்தின் தனிக்குறிப்பீடு

நான் கட்டடத்தை வசிக்குமிடமாகவே பயன்படுத்தக் கருதுகிறேன். வசிப்பதற்கல்லாத / நோக்கித்திற்கு பயன்படுத்த விழைகிறேன்.

கட்டட மனை மாநகராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைப்புத் திட்டத்தில் எண்............................................ தேதி ................................................ உள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைப்புத் திட்டத்தில் இல்லை. மேலும் மேற்கூரிய மனை இடத்திற்குஒப்புதல் அளிக்குமாறும் பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

உரிமம் பெற்ற அளவாயர் ஒப்பம்

வகுப்பு

நிலம் மற்றும் கட்டட உரிமையாளர்
(அல்) விண்ணப்பதாரர் ஒப்பம்

## நிபந்தனைகள்

(1) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 237–ஆவது பிரிவின்படி ஆணையாளர் ஒப்புதல் தெரிவித்தாலன்றி அல்லது மேற்கூரிய சட்டத்தின் 238–ஆவது பிரிவின்படி அவராலோ அல்லது 239–ஆவது பிரிவின்படி நிலைக்குழுவினாலோ தமிழ்நாடு நகரத்திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆவது பிரிவின்படி அனுமதி வழங்கப்பட்டாலன்றி நான் இப்பணியைச் செய்ய ஆரம்பிக்கமாட்டேன் என ஒப்புக் கொள்கிறேன்.

(2) அனுமதிக்கப்பட்ட மனைக்கட்ட உருவரைகள் வேலைமான திட்டத் தனிக்குறிப்புகள் இவற்றுக்குப் புறம்பாகவோ, அல்லது சென்னை மாநகராட்சி சட்டம் 1919–இன் கட்டுப்பாட்டு விதிகளுக்கு மாறாகவோ, அல்லது அதன்படி செய்யப்பட்டுள்ள எந்த ஒரு விதி, துணை, விதி, ஆணை அல்லது பிற அறிவிக்கப்பட்ட அறிக்கை, அல்லது அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள எந்த ஒரு கட்டளை அல்லது சட்ட வரம்புக்குட்பட்ட வேண்டுதற் கோரிக்கை இவற்றுக்கு மாறாகவோ எப்பணியையும் செய்யமாட்டேன் என ஒப்புக்கொள்கிறேன்.

(3) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 244–ஆவது பிரிவு அல்லது 256–ஆவது பிரிவுகளுக்கு ஏற்ப ஆணையாளரால் அனுப்பப்படும் முறைப்படியான ஏதாவது தகவலறிவிப்பு மற்றும் அவரால் உறுதி செய்யப்பட்ட ஏதாவது ஆணை இவற்றுக்கேற்ப ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டி வந்தால் அதைச் செய்ய ஒப்புக்கொள்கிறேன்.

(4) ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலவரைப் படிவத்தின் ஒரு நகலும், ஒப்புதல் பெற்ற கட்டட உருவரைப் படங்களின் ஒரு தொகுதியும் கட்டடம் கட்டும் இடத்தில் எப்பொழுதும் பணி நடைபெறும் நேரங்களில் வைத்துக் கொண்டிருப்பேன் என்றும், அத்தகைய வரைபடங்கள் பார்வைக்குக் கிடைக்குமாறு செய்யவும், நேரிய காலங்களில் கட்டடத்தை ஆணையாளரோ அல்லது அவர் சார்பில் அவரால் அதிகாரம் பெற்ற அலுவலரோ மேற்பார்வை செய்யத் திறந்திருக்குமாறு செய்யவும் ஒப்புக் கொள்கிறேன்.

(5) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 107–ஆவது பிரிவுப்படி ஆணையாளருக்கு முன்னறிவிப்புச் செய்யவும், மற்றும் கட்டட நிறைவு வரைப்படிவத் தொகுதி ஒன்றையும், கட்டடம் கட்டி முடிந்த பதினைந்து நாட்களுக்குள்ளோ அல்லது கட்டடத்தில் குடியேறிய உடனோ எது முன்னதாக நிகழினும் அப்போது அளிக்க ஒப்புக்கொள்கிறேன்.

(6) மேலும் சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டம் 1939–இன் 26 மற்றும் 33 பிரிவுகளின்படி சென்னை மாநகராட்சிப் பொதுச் சுகாதாரத் துறையின் சான்றிதழ் பெறும் வரை கட்டப்போகும் கட்டடம் அல்லது மீண்டும் கட்டப்போகும் கட்டடத்தில் குடியேறுவதில்லை என்றும் அல்லது பிறரைக் குடியமர்த்துவதோ, குடியேறுவதற்கு அனுமதி வழங்குவதோ இல்லை என்றும் ஒப்புக் கொள்கிறேன்.

நிலம் மற்றும் கட்டட உரிமையாளர்
(அல்) விண்ணப்பதாரர் ஒப்பம்

### விண்ணப்பதாருக்கு ஒரு முக்கிய தகவல்

கீழ்காணும் சென்னை மாநகராட்சி சட்டம் பிரிவு 356 (10) சிறப்புக் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

துணைப்பிரிவு இரண்டின்படி உரிமை (அல்) அனுமதி (அல்) பதிவு இவற்றிற்காகச் செலுத்தப்படும் முன் கட்டணம், (சட்ட விதியின் கூறு (அ) வில் குறிக்கப்பட்டது (அல்) துணை வாசகம் (அல்) குறிக்கப்பட்ட தொகை அவ்வாறு செலுத்துபவரை அவ்வுரிமை (அல்) அனுமதி (அல்) பதிவுக்கு உரியவராக்காது. ஆனால் உரிமை (அல்) அனுமதி (அல்) பதிவு நிராகரிக்கப்பட்டால் அக்கட்டணத்தில் பாதிக்கு மேற்படாததையோ (அல்) பெருமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட மேற்கூரிய தொகையோ திருப்பிக் கொடுத்தற்குரியது.

## பிற்சேர்க்கை – ஆ

(பார்க்க விதி 27 ) (1) சென்னை மாநகராட்சிக் கட்டட விதிகள் (1972) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 248–ஆம் பிரிவுப்படி அல்லது தமிழ்நாடு நகரத் திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆம் பிரிவுப்படியான விண்ணப்பம்.

அனுப்புநர்

உரிமையாளர் (அல்) விண்ணப்பதாரர் பெயர்

முகவரி

______________________________

______________________________

பெறுநர்

ஆணையாளர்

சென்னை மாநகராட்சி, சென்னை

ஐயா,

நான் அடியிற்கண்ட கோட்ட எண்.......................... இல் உள்ள .............................................................. தெரு அல்லது சாலையில், மாநகராட்சி மதிப்பீட்டு எண்.............................................. நகர/மறு நில அளவீட்டு எண் .............................................................. இவற்றைக் கொண்ட மனையில் குடிசை/குடிசைகள் கட்ட / மீண்டும் கட்ட / அதில் மாற்றங்கள் செய்ய / விரிவாக்கச் சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 248–ஆவது பிரிவின் கட்டுப்பாட்டு விதிகளோடு, சென்னை மாநகராட்சிக் கட்டட விதிகள் 1972–இன் படியும் தமிழ்நாடு நகரத் திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆவது பிரிவின்படியும் எண்ணுகிறேன்.

நான் இத்துடன் குடிசை / குடிசைகள் கட்டப்போகும் / மீண்டும் கட்டப்போகும் / மாற்றங்கள் செய்யப் போகும் / விரிவாக்கப்போகும் மனையின் வரைப்படத் தேவைப்படும் அளவுக்கு உடன்பட்டு அனுப்புகிறேன்.

நிலம் மற்றும் குடிசையின் உரிமையாளர்
(அல்) விண்ணப்பதாரர் ஒப்பம்

### நிபந்தனைகள்

(1) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 250, 251 பிரிவுகள்படி தமிழ்நாடு நகரத்திட்டச் சட்டம் 1920–இன் 17–ஆவது பிரிவுப்படி ஆணையாளர் அல்லது நிலைக்குழுவினர் அனுமதி கிடைக்கும் வரை இப்பணியை தொடங்க மாட்டேன் என ஒப்புக் கொள்கிறேன்.

(2) ஆணையாளரின் அனுமதிக்குப் புறம்பான எத்தகைய பணியையோ அல்லது சென்னை மாநகராட்சி சட்டம் 1919–இன் கட்டுப்பாட்டு விதிகளுக்கு மாறாகவோ, அல்லது அதன்படி செய்யப்பட்டுள்ள எந்த ஒரு விதி / துணை விதி / ஆணை அல்லது பிற அறிவிக்கப்பட்ட அறிக்கை, அல்லது அச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்டுள்ள எந்த ஒரு கட்டளை அல்லது சட்ட வரம்புக்குட்பட்ட வேண்டுதல் கோரிக்கை இவற்றிற்கு மாறாகவோ எப்பணியையும் செய்யமாட்டேன் என ஒப்புக்கொள்கிறேன்.

(3) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 256–ஆவது பிரிவுக்கு ஏற்ப ஆணையாளரால் அனுப்பப்படும் முறைப்படியான தகவலறிவிப்பு மற்றும் அவரால் உறுதி செய்யப்பட்ட ஏதாவது ஆணை இவற்றுக்கேற்ப ஏதாவது மாற்றங்கள் செய்ய வந்தால் அதைச் செய்ய ஒப்புக்கொள்கிறேன்.

(4) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919–இன் 107–ஆவது பிரிவுப்படி ஆணையாளருக்கு குடிசை கட்டி முடிந்த பதினைந்து நாட்களுக்குள்ளோ அல்லது குடிசையில் குடியேறிய உடனோ எது முன்னதாக நிகழினும் அப்போது முன்னறிவிப்புச் செய்ய ஒப்புக்கொள்கிறேன்.

(5) சென்னை மாநகராட்சிச் சட்டம் 1939–இன் 26 மற்றும் 33 பிரிவுகளின்படி சென்னை மாநகராட்சி பொதுச் சுகாதாரத் துறையின் சான்றிதழ் பெறும் வரை கட்டப்போகும் கட்டடம் அல்லது மீண்டும் கட்டப்போகும் குடிசையில் குடியேறுவதில்லை என்றும் அல்லது பிறரைக் குடியமர்த்துவதோ, குடியேறுவதற்கு அனுமதி வழங்குவதோ இல்லை என்றும் ஒப்புக் கொள்கிறேன்.

நிலம் மற்றும் குடிசையின் உரிமையாளர்
(அல்) விண்ணப்பதாரர் ஒப்பம்

## பிற்சேர்க்கை – உ

உரிமம் பெற்ற அளவாயருக்கும் மற்றும் கட்டடம் கட்ட, மீண்டும் கட்ட, சேர்க்க அல்லது மாற்றம் செய்யக் கருதும் உரிமையாளருக்கும் இடையிலான ஒப்பந்தம்.

.................................................................................................... என்னும் உரிமம் பெற்ற அளவாயர் சென்னை மாநகராட்சி ஆணையாளரால் முறையாக அளிக்கப்பட்ட உரிமம் எண்............................ வகுப்பு ............................ பெற்றிருப்பவர் இனி உரிமம் பெற்ற அளவாயர் என்றழைக்கப்படுபவரால் ஒரு தரப்பிலும் .................................................... ................................................................................................ வசிக்கும் ............................................................................................. ................................................................................................ இனி உரிமையாளரென்று அழைக்கப்படுபவரால் (அச்சொல் சந்தர்ப்பத்திற் முரண்பட்டாலன்றி அவருடைய மரபு வழி உரிமைக்குடையோரையும் நிருவாகிகளையும், நிறைவேற்றுபவர்கள் மற்றும் சட்டபடியான பிரதிநிதிகளையும், பேற்றுரிமையாளர்களையும் உட்கொண்டதெனப் பொருள்படும்) மறுதரப்பினரும் 20................ ஆண்டு ...................................... மாதம் ............................... தேதியாகிய இன்று இவ்வொப்பந்தம் செய்யப்பட்டது.

உரிமையாளர் இங்கு இணைக்கப்பட்டுள்ள கட்டட விண்ணப்பத்துடன் இணைந்துள்ள மனைஉரு மாதிரியில் விவரமாக விவரிக்கப்பட்ட கட்டட மனையின் அனைத்து கூறுகள் மற்றும் பகுதிகளின் முழு மற்றும் ஏகபோக உரிமையாளராக இருப்பதாலும்,

மேலும் அவ்வுரிமையாளர், இங்கு அளிக்கப்பட்டுள்ள மாதிரிகள் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படிக் கட்டடத்தைக் கட்ட மீண்டும் கட்ட, விரிவாக்க அல்லது மாறுதல் செய்யக் கருதுவதாலும், உரிமையாளர், கட்டட மனைக்கும் மற்றும் அத்தகைய ஒப்புதல் பெற்ற மனையின் மேற்கண்ட மாதிரிகளின் விவரிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளவும் சென்னை மாநகராட்சியின் ஆணையாளரின் ஒப்புதலை நாடுவதாலும்,

மேலும் இவ்விரு தரப்பினரும் இவ்வகையில் இவ்வாசகங்களை நிவேற்றும் சட்டப் பிணைப்பிக்கு உட்பட்டுள்ளமையாலும் மற்றும் இதைக் கட்ட அல்லது மீண்டும் கட்டுவதற்கான விண்ணப்பத்துடன் பணிந்தனுப்புவதாலும்,

மேலும் ஆணையாளரால் வழங்கப்பட்ட உரிமத்தின் இணைப்பு 2–இல் வரையறுத்து ஒப்புக்கொண்ட கட்டணத்தை அளவாயர், உரிமையாளருக்கு விதிக்க ஒப்புக் கொண்டுள்ளதாலும்,

மேலும் உரிமையாளர், கூறப்பட்ட கட்டணத்தை கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதாலும்,

மேலும் அளவாயர், நடைமுறையிலிருக்கும் அனைத்து விதிகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் இணங்கி உருவரை மாதிரிகளைத் தயாரித்துள்ளதாலும்,

மேலும் அளவாயர், உரிமையாளர் சார்பாகப் பணி நிறைவேற்றத்தைக் கண்காணிக்க, ஒப்புக்கொண்டுள்ளதாலும்

மேலும் உரிமையாளர், ஆணையாளர் விண்ணப்பத்திற்கு அனுமதி அளிக்கும்வரை பணியை ஆரம்பிப்பதில்லை என ஒப்புக்கொண்டுள்ளதாலும்,

மேலும் அளவாயர், ஆணையாளரால் அளிக்கப்பட்ட இசைவாணைச் சீட்டின் படி பணி செய்வதற்கான வாய்மைச் சான்றாக, பணி நிறைவேற்றச் சான்றிதழை ஆணையாளருக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளதாலும்,

உரிமையாளர் ஆணையாளரால் அளிக்கப்பட்டுள்ள இசைவாணைச் சீட்டிற்கு இணங்கப் பணிகளை நிறைவேற்ற அவ்வப்பொழுது அளவாயரின் ஆலோசனையும் பெற ஒப்புக்கொண்டுள்ளதாலும்

இப்பொழுது மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்துட்கொண்டும், மேலும் சென்னை மாநகராட்சி சட்டம் பிரிவு 354 (1)–இன்படியான அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி இதனால் பிணிப்புறும் இருதரப்பாரைக் கருத்துட்கொண்டும், சட்டப்படி உருவான ஒப்பந்தப் பத்திரத்தின் ஆணைச்சான்றாக, இதில் அவ்வளவாயரும், உரிமையாளரும் ஒன்று சேர்ந்து தங்கள் ஒப்பத்தையும் மற்றும் முத்திரையையுமிட்டு, முன் குறித்த ஆண்டு, மாதம், தேதியில் அடியிற் கண்டோர் முன்னிலையில், உறுதிப்படுத்துகின்றனர்.

சான்றாளர்களின் முன்னிலையில்

1.

2.

உரிமையாளர் — உரிமம் பெற்ற அளவாயர்.

கட்டட உருவரை மாதிரி அடியிற்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்படி மாறாத வண்ணங்களால் தீட்டப்பெற்றிருத்தல் வேண்டும்

## அட்டவணை

| வகை | நில உருவரை படம் | | கட்டட உருவரை படம் | |
|---|---|---|---|---|
| | வெண்மை மாதிரி | நீலப் பதிவு | வெண்மை மாதிரி | நீலப் பதிவு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| இருக்கும் கட்டடம் ... | கறுப்பு (புறக்கோடு) | வெண்மை | கறுப்பு | வெண்மை |
| கருதப்பட்ட பணி ... | சிவப்பு நிரப்பப்பட்டது | சிவப்பு | சிவப்பு | சிவப்பு |
| வடிகால் சாக்கடைப் பணிகள் ... | சிவப்பு புள்ளியிடப்பட்டது | சிவப்பு புள்ளியிடப்பட்டது | சிவப்பு புள்ளியிடப்பட்டது | சிவப்பு புள்ளியிடப்பட்டது |
| குடிநீர் வழங்கு பணிகள் ... | கறுப்பு புள்ளியிடப்பட்டது | கறுப்பு புள்ளியிடப்பட்டது | கறுப்பு புள்ளியிடப்பட்டது | கறுப்பு புள்ளியிடப்பட்டது |
| இடித்துத் தள்ளக் கருதும் பணி ... | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |
| திறந்த வெளிகள் ... | நிறம் இல்லை | நிறம் இல்லை | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |
| மனைப்படக் கோடுகள் ... | கறுப்பு தடிப்பானது | கறுப்பு தடிப்பானது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |
| அனுமதிக்கத் தக்க கட்டடக் கோடுகள் ... | கறுப்பு தடிப்புப் புள்ளியாலானது | கறுப்பு தடிப்புப் புள்ளியாலானது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |
| இருக்கும் தெரு (க்கள்) ... | பச்சை | பச்சை | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |
| இனி அமையப் போகும் தெரு (க்கள்) ஏதேனும் இருந்தால் ... | பச்சை புள்ளியிடப்பட்டது | பச்சை புள்ளியிடப்பட்டது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது | மஞ்சள் செதுக்கப்பட்ட வரியுடையது |

செ.மா.அ. 251 / 2008–09 / ப. து. (ந. பி.) / 10,000 பிரதி. 4 தாள். / நவ. 2008